# பயம்!

ஒருவன், காட்டு வழியே போய்க் கொண்டிருந்தான். பசி எடுக்கவே, ஒரு மரத்தின் உயரத்தில் பழங்கள் இருப்பதைக் கண்டான். மரத்தின் மீது ஏறி, கிளையின் மேல் நகர்ந்து சென்றபோது, கிளை முறிந்துவிட்டது. சட்டென்று சுதாரித்த அவன், வேறு ஒரு கிளையைப் பிடித்துக்கொண்டு தொங்க ஆரம்பித்தான்.

குனிந்து பார்த்தால், தரை வெகு கீழே இருந்தது. ''என்னைக் காப்பாற்றுங்கள்'' எனப் பயத்தில் அலறினான்.






அந்தப் பக்கம் ஒரு முதியவர் வந்தார். அவனைப் பார்த்ததும், சிறிய கல் ஒன்றை எடுத்து மேலே எறிந்தார். அவன் பயத்துடன், ''பெரியவரே, உதவி கேட்டால், கல்லால் அடிக்கிறீரே?'' என்றான்.
பெரியவர் மேலும் ஒரு கல்லை எடுத்து, அவன் மேல் வீசினார். அவன் கோபமாகி, விடுவிடுவென இறங்கிவந்து அவரைத் திட்டினான்.

பெரியவர் அமைதியாகச் சிரித்துக்கொண்டே, ''தம்பி, நான் உன்னைப் பார்த்தபோது பயத்தில் இருந்தாய். உன் மூளை வேலை செய்யவில்லை. நான் கல்லை விட்டு எறிந்ததும், என்னை எப்படிப் பிடிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தாய். கீழே இறங்கி வந்து, உன்னைக் காப்பாற்றிக்கொண்டாய்'' என்றார்.

பயம், ஒருவனை முட்டாளாக்கிவிடும்.